**அக்கரைப்பற்று மாநகர சபை - 2022**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அக்கரைப்பற்று மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்ல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கரைப்பற்று மாநகர சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள்,

பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும்

அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) மாநகர சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்காக சம்பளம் மற்றும் சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 6,938,129 தொகை பெறவேண்டிய தொகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நடப்பாண்டின் நிதிக்கூற்றுக்களில் நிலுவைச் சம்பளங்களின் விபரங்கள் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் மாநகர சபையினால் வழங்கப்பட்டிருந்த சோலை வரிக் கழிவீடான ரூபா 100,203 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டில் உள்ளுராட்சித் திணைக்களத்திடமிருந்து நன்கொடையாக கிடைக்கப்பெற்ற 09 வகையான உருப்படிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 695,084 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் மின்சார மற்றும் எழுதுகருவி பொருட்களின் கையிருப்பு ரூபா 204,565 தொகை நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் கணக்கறிக்கைகளில் களஞ்சிய கணக்குகளில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| மாநகர சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய தொகைக்கும் உள்ளூர் கடன் அபிவிருத்தி தலைமை அலுவலகத்தின் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ளவாறு நேரொத்த மீதிகளுக்கிடையே ரூபா 1,262,967 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டிருந்தது. | பதிவேடுகளுடன் இணக்கப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 22,325,733 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 322,737 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2021 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் | 16,953,530 | 60,981,177 | 8,358,686 | 52,622,490 | 11,525,000 | 14,253,530 | 8,617,597 | 46,727,647 |
| (ii) வாடகை | 23,470,608 | 35,876,692 | 12,578,997 | 23,297,695 | 26,511,300 | 20,884,757 | 21,696,601 | 22,628,680 |
| (iii) உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 5,200,000 | 3,475,500 | 3,475,500 | - | 5,725,000 | 2,962,800 | 2,962,800 | - |
| (iv) ஏனைய வருமானம் | 41,850,000 | 82,203,621 | 82,203,621 | - | 26,875,000 | 10,449,214 | 17,402,474 | 4,157,535 |
| (v) கூட்டுத் தொகை | 87,474,139 | 182,536,990 | 106,616,804 | 75,920,185 | 70,636,300 | 48,550,301 | 50,679,472 | 73,513,862 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் நிலுவை வீதவரி ரூபா 46,727,647 ஆக இருந்ததுடன் அதில் ஆண்டின் போது அறவிடல் ரூபா 5,912,440 ஆக இருந்தமையால் ரூபா 40,815,207 தொகையான நிலுவையொன்று 01 ஆண்டு முதல் 07 ஆண்டுகள் வரையான காலவீச்சில் காணப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நடுக்கட்டு உத்தியோகத்தர்களை நியமித்து ஆதனவரி நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அறவிட வேண்டிய வருமானங்களை மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| (i) அக்கரைப்பற்று நவீன பொதுச் சந்தை வணிகவளாக கடையறைகள், வணிகவளாக நிலம், பேரூந்து தரிப்பிட வணிகவளாக கடையறைகள், மீன் சந்தை, பஸ் தரிப்பு நிலைய மலசலகூட வாடகை, பஸ் தரிப்பிட வாடகை மற்றும் தனியார் வாகன தரிப்பிடக் கட்டணம் ஆகியவை வாடகைக்கு வழங்கியமை தொடர்பில் 226 வாடகைதாரர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 12,598,164 தொகை 2012 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை அறவிடுவதற்கு மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவிடுவதற்கும் மற்றும் பதிவழிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 1992 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை குத்தகை நிலுவைகள் ரூபா 8,552,868 தொகையாக காணப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

**(இ) முத்திரைக் கட்டணம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரைக்குமான காலப்பகுதிகளில் மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா.782,450 தொகையாக காணப்பட்டிருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய வருமானத்தை மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிகளில் நடமாடும் சேவைகள் மூலம் கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தினால் 22 காணி உரிமையாளர்களிடமிருந்து மேலதிகமாக அறவிடப்பட்டிருந்த ரூபா 1,066,997 தொகையான முத்திரைத் தீர்வைகளினை மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரகளிடமிருந்தும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் மாநகர சபைக்கு கிடைக்கப் பெற்ற விளம்பர இலத்திரனியல் தொலைக்காட்சியானது 2019 ஆம் ஆண்டில் பழுதடைந்து காணப்பட்டிருந்து. | நடப்பாண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | விளம்பர இலத்திரனியல் தொலைக்காட்சியினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடமிருந்து குடிநீரினை பெற்றுக்கொள்வதற்காக மாநகர சபையின் எல்லையினுள் 184 பயனாளிகளினால் வெட்டப்பட்ட கொங்கிரீட், தார் மற்றும் கிறவல் வீதிகளினை மீள்புனரமைப்புக்காக மீளாய்வாண்டு வரை ரூபா 1,463,000 தொகை வைப்பாக பயனாளிகளிடமிருந்து பெறப்பட்டிருந்ததுடன், கணக்காய்வுத் திகதி வரைக்கும் இவ்வீதிகள் பயனாளிகளினால் | பதில் தரப்படவில்லை. | நீரிணைப்பிற்காக வெட்டப்பட்ட வீதிகளினை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீள் புனரமைப்பு செய்யப்பட்டு வைப்பு பணத்தினை உரிய பயனாளிகளுக்கு திருப்பி செலுத்துவதற்கு அல்லது இவ்வைப்பினை பயன்படுத்தி சபையினால் இவ்வீதிகளை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் அவ்வீதிகள் பள்ளங்குழிகளாக காணப்படுவதுடன், எதிர்காலத்தில் முற்றாக சேதங்களுக்கு உட்பட்டு முழுமையாக மீளசீரமைக்கவேண்டிய நிலை ஏற்படும். | | |
| (இ) | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் உள்ளூராட்சி திணைக்களத்தினால் சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 13 பொருட்களின் பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு நிதிநிலமைக் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | பொருட்களின் கொள்விலலை பெறப்பட்டு நிதிநிலமைக் கூற்றில் சேர்க்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபைக்குச் சொந்தமானதும் மற்றும் மாநகர சபையினால் பயன்படுத்தப்படும் 28 காணி, கட்டிடங்கள் மற்றும் 18 வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்படப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணி, கட்டிடங்கள் மற்றும் வானங்களின் பெறுமதிகளினை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | காணி, கட்டிடங்கள் மற்றும் வாகனங்களின் பெறுமதிகளினை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாநகர சபைக்குச் சொந்தமான 12 வாகனங்களினை திருத்தம்செய்து மீளப்பயன்படுத்துவதற்கு அல்லது அதனை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வாகனங்களினை திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது அதனை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மாநகர சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 09 வாகனங்களின் உரிமையினை மாநகர சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்வதற்கு கணக்காய்வுத் திகதி வரைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையினை மாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. | வாகனங்களின் உரிமையினை மாநகர சபையின் பெயருக்கு மாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 2022 ஆண்டிற்காக மீண்டுவரும் செலவினங்களான வழங்கல்களும் சாதனமும் மற்றும் பழுதுபார்த்தல் செயற்பாடுகளுக்காக ரூபா 95 மில்லியனும் மூலதனச் செலவுகளாக ரூபா 11.3 மில்லியனும் பாதீடு செய்யப்பட்ட போதிலும், சபையினால் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நடப்பாண்டிற்கு தேவைப்பட்டியல் தயாரிக்கப்பட்டு பூரண பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | பெறுகைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நீர்ப்பூங்காவில் பொதுமக்களின் பொழுது போக்கிற்காக ரூபா 2,910,000 தொகை செலவில் மூன்று குடைகள் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டிருந்த போதிலும் அக் குடையின் கீழ் அமர்ந்திருந்து பொதுமக்கள் ஓய்வெடுப்பதற்கு ஏற்ற வகையில் இருக்கைகள் அமைக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், நீர்ப்பூங்காவின் பாதையானது குளத்தின் நடுவில் அமைக்கப்பட்டிருப்பதால் அதன் பாவனையாளர்களின் பாதுகாபினை உறுதிப்படுத்தும் வகையில் சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இதனை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சிறுவர்கள் தவறி விழுவதைத் தடுப்பதற்குரிய பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று பொது நூலகத்தில் இலத்திரனியல் நூலகம் ரூபா 2,848,078 செலவில் அமைக்கப்பட்டிருந்த போதிலும் இதனை செயற்படுத்துவதற்குத் தேவையான கோகா (KOHA) மென் பொருள், சேவர், பார் கோட் ரீடர் மற்றும் பார் காட் பிரின்டர் போன்ற இலத்திரனியல் உபகரண வசதிகளின்மையினால் இவ் இலத்திரனியல் நூல் நிலையத்தினை செயற்படுத்த முடியாமல் பயன்பாடற்று காணப்பட்டிருந்தது. இதனால் இவ் இலத்திரனியல் நூலகத்தின் மூலம் பெறவேண்டிய சேவைகளினை மாணவர்களினால் அடைந்து கொள்ள முடியாமல் இருந்தது. | தற்போது நிலவும் நிதி நெருக்கடிகளில் இச் செயற்பாடுகள் சற்று காலதாமதாமாகின்றது. | நிதியேற்பாடுகளினை பூரணமாகப் பெற்று எதிர்பார்த்த இலக்கினை அடையக் கூடிய வகையில் நடவடிக்கை மெற்கொள்ளுதல் வேண்டும். |

### 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| மாநகர சபையில் கடன்பெற்று இறந்த மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட 07 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 193,799 கடன் நிலுவைத் தொகையினை | நிலுவைகளை அறவிடுவதற்கும் பதிவழிப்பதற்கும் நடவடிக்கை | கடன் நிலுவைத் தொகையினை உரியவர்களிடமிருந்து அல்லது |

| | | |
|---|---|---|
| உரியவர்களிடமிருந்து அல்லது பிணையாளிகளிடமிருந்து அறவிடுவதற்கு 2007 ஆம் ஆண்டிலிருந்து மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப் பட்டுள்ளது. | பிணையாளிகளிட மிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 திண்மக்கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மாநகர சபை பொதுமக்களிடமிருந்து நாளாந்தம் பெற்றுக்கொள்ளும் திண்மக்கழிவுகளை அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குச் சொந்தமான திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்திற்கு வழங்கப்படுகின்றது. அவ்வாறு வழங்கப்படும் ஒரு டொன் உக்கக்கூடிய கழிவிற்கு ரூபா 200 மற்றும் உக்காத கழிவிற்கு ரூபா 300 தொகையும் செலுத்தப்பட்டு வருவதுடன், மீளாய்வாண்டின் போது மாநகர சபையினால் தரம்பிரிக்காது கொட்டப்பட்டுவரும் ஒவ்வொரு டொன் உக்ககூடிய கழிவுகளுக்கு ரூபா 100 மிகையாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டில் மாநகர சபையினால் 1,587 டொன் உக்காத கழிவுகளாக கருதி ரூபா 476,202 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாட்டு காரணத்தினால் தரம்பிரிக்கும் செயற்பாட்டினை முறையாக மேற்கொள்ள முடியாதிருந்தது. | திண்மக் கழிவுகளினை தரம்பிரித்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |